OS No.27/2013, நாள்: 27.11.2019

<u>வா.சா.1 ___ தண்டபாணி ஆஜர், குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>

நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் மாங்காய் வியாபரமும் விவசாயமும் செய்து வருகிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்க நன்றாக தெரியும் என்றால் சரிதான். பிரமாண பத்திரத்தில் என்ன எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியும். பிரமாண பத்திரத்தில் கண்டுள்ள சங்கதிகளும் வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் குறித்தும் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று தெரியுமா என்றால் என்னுடைய தாத்தாவிற்கு பிதுராஜிதமாய் பாத்தியப்பட்ட சொத்து. என் தாத்தாவின் பெயர் என்னவென்றால் வெங்கடப்பநாயுடு அவருடைய அப்பா பெயர் முனியப்ப நாயுடு. வெங்கடப்ப நாயுடுவிற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 பெண்கள் 4 ஆண்கள். தாவா சொத்துக்களை பொறுத்து அவர் பல்வேறு காலக்கட்டங்களில் யார் யாருக்கு என்னென்ன சொத்துக்களை விற்பனை செய்தார் என்றும் ஆவணங்களை ஏற்படுத்தினார் என்றும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அவர் ஏற்படுத்திக்கொடுத்த ஆவணங்களை பொறுத்து எனக்கு நேரடியாக தெரியாதபோது அவற்றை குறித்து ஆட்சேபிக்க எனக்கு உரிமை எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வெங்கடப்பநாயுடுவின் சொத்தை பொறுத்து அவர் கிரயமோ, தானமோ செய்ய அவருக்கு உரிமையுள்ளது என்றால் சரிதான். அவருக்கு உரிமையான சொத்தை பொறுத்து அவர் ஏற்படுத்திக்கொடுத்த ஆவணங்களை பொறுத்து ஆட்சேபிக்க எனக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 வெங்கடப்ப நாயுடுவால், போடியம்மாள் முனியப்ப நாயுடு பெயரில் எற்படுத்திக்கொடுத்த கிரய அவணம் என்றால் சரிதான். நிபந்தனையோடு கிரயம் செய்தார். மேற்படி ஆவணம் வெங்கடப்ப நாயுடு மற்றும் அவருடைய மக்கள் நால்வருக்கும்

சேர்த்துதான் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சின்னசாமி என்பவர் அப்போதே மேஜர் என்றால் சரிதான். அந்த ஆவணத்திலேயே கிரய தொகை முழுவதும் செல்லாகிவிட்டது என்றுதான் எழுதப்பட்டுள்ளது என்றால் பணம் கட்டவில்லை. பணம் கட்டியதாக சொல்லிதான் பத்திரம் செய்யப்பட்டுள்ளது என்றும் வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. அந்த ஆவணத்திலேயே சுவாதீனமும் முனியப்பநாயுடு மற்றும் போடியம்மாளுக்கு கொடுத்துவிட்டதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சுவாதீனம் விடவில்லை. நான் எந்த காலத்திலிருந்து சுவாதீனத்தில் இருக்கிறேன் என்றால் கடந்த 15 ஆண்டுகளாக இருக்கிறேன். அந்த ஆவணத்திலேயே பணம் முழுவதும் பெற்றுக்கொண்டதாகவும் சுவாதீனம் கொடுத்துவிட்டதாகவும் இனிவருங்காலங்களில் கிரயதாரர்களே இஷ்டம்போல அனுபவித்து கொள்ளலாம் என எழுதப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு எழுதினால்தான் பத்திரம் பதிவு செய்யமுடியும் அந்த ஆவணம் பதிவு செய்தற்காக எழுதப்பட்டவை அல்ல என்றும் அதிலுள்ள சங்கதிகள் உண்மை என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக ஒரு சொத்தை ஒரு நபருக்கு விற்ற பின்பு வேறொருவருக்கு விற்க இயலாது என்றால் சரிதான். இரண்டாவதாக அந்த விற்பனை ஏற்பட்டால் அது விற்பவருடைய தவறு என்றால் சரிதான். இரண்டாவதாக கிரயம் பெறுபவர் ஆட்சேபனை இருந்தால் அவருக்கு விற்றவர் மீதுதான் நடவடிக்கை எடுக்க இயலும் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து 27.12.1967ம் தேதியிலேயே போடியம்மாள் மற்றும் முனியப்பநாயுடு பெயரில் கிரயப்பத்திரம் ஆகிவிட்டது என்றால் சரிதான். அந்த கிரயபத்திரத்தில் கண்டுள்ள சொத்தை மீண்டும் விற்பனை செய்தால் அது தவறானது என்று சொன்னால் சரிதான். ஆனால் அதிலுள்ள நிபந்தனையை நிறைவேற்றாத வரையில் அது செல்லாது. அந்த நிபந்தனையை பொறுத்து

கிரயதார்களான போடியம்மாள் மற்றும் முனியப்பநாயுடு மற்றும் முத்துகவுண்டருக்குள்ள நிபந்தனை என்று சொன்னால் சரியல்ல. நிபந்தனை யார் யாருக்கிடையில் என்றால் வெங்கடப்ப நாயுடுவிற்கும் முத்துகவுண்டருக்கும். அவர்களுக்குள்ள நிபந்தனை போடியம்மாளையும் முனியப்பநாயுடுவையும் கட்டப்படுத்தாது என்று சொன்னால் சரிதான். வெங்கடப்ப நாயுடுவிற்கும் முத்துகவுண்டருக்கும் உள்ள நிபந்தனை பொறுத்து நிறைவேற்றினாலோ நிறைவேற்றாமல்போனாலோ போடியம்மாள் மற்றும் முனியப்பநாயுடுவை பாதிக்காது என்று சொன்னால் சரிதான். நிபந்தனையை பொறுத்து போடியம்மாள் மற்றும் முனியப்பநாயுடுவிற்கு எந்த பொறுப்பும் இல்லாததால் வா.சா.ஆ.2ஐ பொறுத்து நான் ஆட்சேபிக்க உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஐ பொறுத்து என்ககு எந்த விவரம் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆவணத்தில் போடியம்மாளும் முனியப்பநாயுடுவும் முத்துகவுண்டருக்கு பணம் கொடுக்கவேண்டும் என்றுதான் காணப்படுகிறது என்றும், அந்த பணத்தை அவர்கள் கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால் அதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை. பணம் வாங்கவேண்டிய முத்துகவுண்டர்தான் அவருக்கு பணம் வந்ததா இல்லையா என்று ஆட்சேபிக்க இயலும் என்றும் நான் அதுகுறித்து ஆட்சேபிக்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. நான் எந்த ஆண்டு பிறந்தேன் என்றால் 1982ம் ஆண்டு பிறந்தேன். நான் பிறப்பதற்கு முன்பு வெங்டகப்பநாயுடு குடும்பத்தாருக்கும், போடியம்மாள் முனியப்பநாயுடுவிற்கும் முத்துகவுண்டருக்கும் நடந்த பரிவர்த்தனைகள் குறித்து எனக்கு தெரியாது என்றால் நான் ஆவணங்களின் அடிப்படையில் கேட்கிறேன். மேற்படி வா.சா.ஆ.2ல் எந்த புல எண்ணணில் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு எந்த செக்குபந்தியில் கிரயம் செய்துகொடுத்தது தெரியுமா என்றால் புல எண்.274/7ல் 41 சென்ட்டும், 272ல் விஸ்தீரணம் தெரியாது 258,

275, ஆகிய புல எண்களில் கிரயம் செய்துக்கொடுக்கப்பட்டது. அந்த ஆவணத்தின்படி மொத்தம் 5 புல எண்களில் 2 எக்கர் 45 செண்ட் கிரயம் செய்துக்கொடுத்தார் என்றால் சரிதான். அவர்கள் கிரயம் பெற்ற நாள்முதல் அவர்கள்தான் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான்தான் அனுபவித்து வருகிறேன். ஒரு நிலத்தை வாங்குபவர்கள் அதற்கு முன்பே வில்லங்கம் பார்த்து தான் வாங்குவார்கள் என்றால் சரிதான். அவ்வாறு நான் ஏதாவது வில்லங்கம் பார்த்தேனா என்றால் பார்த்தேன். எந்த ஆண்டிலிருந்து எந்த ஆண்டு வரை வில்லங்கம் பார்த்தேன் என்றால் 25 ஆண்டுகளுக்கு பார்த்தேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. உண்மையாக நான் பார்ததிருந்தால் அந்த ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றும் மோசடியாக செய்ததால்தான் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கடன் பெற்ற போது வழக்கு சொத்தை பொறுத்து வில்லங்க சான்று கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அது 15 ஆண்டுகளுக்குதான் போட்டுக்கொடுத்தேன். 1967ம் ஆண்டுக்குரிய வில்லங்கத்தை தாக்கல் செய்திருந்தால் எனக்கு லோன் கிடைத்திருக்காது என்றும் அதை மோசடியாக கம்மியாக ஆண்டாக காண்பித்துதான் கடன் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பட்டா மாறுதல் உத்தரவு யார் யாரை விசாரித்தார்கள் என்றும், அதன் முன் பத்திரதாரர் யார் என்றும், அவர்களை விசாரித்து வழங்கப்பட்டதா என்றால் விசாரித்துதான் வழங்கினார்கள். போடியம்மாளின் வாரிசுகளை விசாரித்தார்களா என்றால் இல்லை. முன்பத்திரதாரர்களை விசாரிக்காமல் பட்டா மாற்றம் செய்தது தவறானது என்றும், அது அவர்களை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2ல் உள்ள நிலங்களுக்கு என்ன செக்குபந்தி போடப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.2ல் உள்ள

விஸ்தீரணமும் செக்க்நதியும் நான் கிரயம் பெற்றகண்டுள்ள செக்குபந்தியும் விஸ்தீரணம் ஒன்றா அல்லது வேறு வேறா என்றால் தற்போது செக்குபந்தி மாறியிருக்கும் விஸ்தீரணம் இதுதான். ஒருவருக்கு ஒருநிலம் சுயமாக பாத்தியப்பட்டது என்றால் அதற்கான மூல பத்திரம் இருக்கும் என்றால் சரிதான். பிதுராஜித சொத்துக்களை சுயசம்பாத்தியத்தில் வாங்கப்பட்ட சொத்து என்று சொன்னால் அது தவறானது என்று சொன்னால் சரிதான். அது வாசகத்திற்காக எழுதப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 கிரய ஆவணத்தில் எனக்கு கிரயம் செய்ததாக சொல்லும் சின்னசாமிக்கு சுயார்ஜிதமாகத்தான் பாத்தியப்பட்டது என்றுதான் எழுதப்பட்டுள்ளது என்றால் அது வாசகத்திற்காக எழுதப்பட்டது. மூலப்பத்திரம் எதாவது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 மோசடியானது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வாசா.ஆ.3ல் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு எழுதப்பட்டுள்ளது என்றால் மொத்தம் 41 சென்ட் என எழுதப்பட்டுள்ளது. செக்குபந்தி தெரியுமா என்றால் தெரியும். செம்பிலி நிலத்திற்கு வடக்கு, சின்னசாமி நிலத்திற்கு தெற்கு பொதுகிணற்றிற்கு கிழக்கு, காவாய்க்கு மேற்கு. நான் கூறும் செக்குபந்திக்களூ கிரயம் பெற்றதாக சொல்லும் அளவு தவறானது ன்று சொன்னால் சரியல்ல. அந்த மோசடியான ஆவணத்தின்மூலம் எனக்கு எந்த உரிமையும் ஏற்படாது என்று சொன்னால் சரியல்ல. மோசடியான ஆவணத்தை வைத்து நான் மோசடியாக ஏற்படுத்திக்கொண்ட வருவாய் துறை ஆவணங்களும் தவறானது என்றும் அது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் நான் எப்போதுமே அனுபவ சுவாதீனம் செய்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. போடியம்மாளும், முனியப்பநாயுடும் வழக்கு சொத்துக்களை அனுபவித்து வந்து அவர்களுக்கு பின்னிட்டு அவரின் வாரிசுகள் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால்

சரியல்ல. பிரதிவாதிகள் அனுபவ சுவாதீனத்திற்கு நான் இடையூறு செய்ததாக அவர்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். பிரதவாதிகள் தான் எனக்கு இடையூறு செய்தார்கள். பிரதிவாதிகள் எனக்கு இடையூறு செய்ததாக நான் புகார் கொடுத்னோ என்றால் இல்லை அவ்வாறு இடையூறு செய்திருந்தால் நான் புகார் கொடுத்திருப்பேன் என்றும் செய்யாததால்தான் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் ஊரறிய உலகறிய சுவாதினத்தில் இருப்பதாக வழக்கிற்காக கூறும் பொய்யான சங்கதி என்று சொன்னால் சரியல்ல. வெங்கடப்பநாயுடு தொடர்ந்து சுவாதீனத்தில் இருந்ததாக கூறுவது வழக்கிற்காக கூறும் பொய்யான சங்கதி என்றும் எப்போது கிரயம் செய்துகொடுத்தாரோ அப்போதே போடியம்மாளுக்கும் முனியப்பநாயுடுக்கும் சுவாதீனம் வந்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல. அவர்களுக்கு வாய்மொழி பாகம் எற்பட்டதாக கூறுவது பொய்யான சங்கதி என்று சொன்னால் சரியல்ல. வாய்மொழி பாகம் மூலம் தாவா சொத்தும் மற்ற சொத்துக்களும் வந்ததாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. போடியம்மாளுக்கு முனியப்பநாயுடு மட்டும்தான் வாரிசு என்றால் சரிதான். 1967ம் அண்டு ஏற்பட ஆவணத்தை பொறுத்து மறுப்பு தெரிவிக்கவோ, கேள்வி கேட்கவோ உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. வெங்கடப்ப நாயுடு 1967ம் ஆண்டு கிரயம் செய்த பின்னிட்டு அவருக்கோ வாரிசுகளுக்கோ எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சின்னசாமிக்கு பாகம் வந்ததாக வழக்கிற்க்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே விற்ற நிலத்தை எனக்கு இரண்டாவதாக விற்பனை செய்ததால் சின்னசாமிமீதுதான் நடவடிக்கை எடுக்க இயலும் என்றும் முதல் பத்திரதாரர்கள்மீது எந்த நடவடிக்கையும் எடுக்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்துள்ள

வா.சாஆ.3 முதல் வா.சா.ஆ.6 ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. இன்றைய தேதிவரையில் பிரதிவாதிகள் தான் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றும் நான் இடையூறு செய்யக்கூடாது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் அவர்களுடைய அப்பா, பாட்டிகளில் பொறுத்து அந்த சொத்துக்களை பொறுத்து நான் விளம்புகை பரிகாரமோ. உறுத்துகட்டளை பரிகாரம் பெற அருகதையல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் சௌகர்ய சமநிலை வாய்ப்போ இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆக தக்கது என்று சொன்னால் சரியல்ல. நான் கூறும் விதமாக வழக்குமூலம் இல்லை என்றும் பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி ஆக தக்கது என்று சொன்னால் சரியல்ல.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.